//நினைவூட்டு –1//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2145/ஆ5/2023, நாள். 03.07.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Award) 2023–2024ம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்வது – தொடர்பாக

பார்வை
1. சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் (முகூபொ) அவர்களின் கடித எண். 2226/P1/2023, நாள்.22.05.2023 மற்றும் 23.06.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 24.05.2023

•••••

2023–2024ம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான (Inspire Award) புதிய பதிவுகள் மே 1ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக பள்ளி மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் பதிவு செய்ததைப் போலவே இந்த ஆண்டும் அனைத்துப் பள்ளிகளில் **6–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்** பதிவு செய்ய வேண்டும் எனவும், இதற்காக www.inspireawards–dt.gov.in என்ற இணையதளம் 2023 மே 1–ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 31–ம் தேதி வரை செயல்படும் என 22.05.2023 நாளிட்ட பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இப்பொருள் சார்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பார்வையில் 2–ல் காணும் கடிதம் 09.05.2023 அன்று இவ்வலுவலக இணைதளம் மூலம் அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு கீழ்காண் விவரங்கள் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களில் வகுப்பிற்கு ஒருவர் என ஐந்து வகுப்புகளுக்கு 5 பேர் என 2023–2024ம் ஆண்டிற்கான (Inspire Award) புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது www.inspireawards–dt.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

**குறிப்புகள் –**

1. பதிவு செய்யும்போது அலைபேசி எண் ஓராண்டு அல்லது ஈராண்டுத் தொடர்புக்கு ஏற்ற வகையில் அமையுமாறு பதிவிட வேண்டும். பள்ளியின் தொலைபேசி எண் இருப்பின் அதை அவசியம் பதிவிட வேண்டும். பள்ளி மாறிச் செல்பவர்கள், ஓய்வு பெறப்போகிறவர்களின் அலைபேசியைக் கண்டிப்பாகப் பதிவிட வேண்டாம்.
2. மின்னஞ்சல் கண்டிப்பாக பள்ளி மின்னஞ்சல் மட்டுமே குறிப்பிட வேண்டும். தனிப்பட்ட மின்னஞ்சல்களைப் பதிய வேண்டாம்.

எனவே (Inspire Award) புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுக்கான புதிய பதிவுகள் மேற்காண் இணையதளத்தில் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு . தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர் –**

1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி)
   மாவட்டக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டம்

(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது.)

2. தலைமையாசிரியர்/
   அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,வேலூர் மாவட்டம்.

**நகல்–**

செயல் இயக்குநர் (முகூபொ),
தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், சென்னை – 600 025.